<u>அனுப்புனர்:</u>

**N நெல்லை கோபால். மூத்த பத்திரிகையாளர்**
***771/1 சாம்டவர், முனுசாமிசாலை, K.K.நகர், சென்னை 78***
***Cell: 9994478389.***


<u>பெறுனர் :</u>

***உயர்திரு, மாண்புமிகுக்கள், அரசு செயலர்கள், காவல்துறை தலைவர் சென்னை மற்றும் திருச்சி,DVAC இயக்குனர் மற்றும் போக்குவரத்து ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் இணை துணை போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோருக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.***

<u>பொருள்:</u>

***<u>கரூர் மாவட்டம் குளித்தலை RTO அலுவலக பகுதி (Unit office) அலுவலகத்தின ஆய்வாளரான திருமதி மீனாட்சியின் ஊழல் பணி குறித்து, உரிய நடவடிக்கை கோருவது தொடர்பாக:</u>***

<u>அய்யா,</u>

*மேற்கண்ட முகவரியில் வசிக்கும் மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபால் -ன் பணிவான வணக்கங்கள்.*

*கரூர் மாவட்டமான குளித்தலை மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாட்சியால் TN 47 S 4144 என்ற டாரஸ் வாகனத்திற்கு கடந்த 16-08-2022-ல் FC வழங்குவதற்கான அனைத்து ஆய்வுகளும் அரவக்குறிச்சி RTO பகுதி அலுவலகத்தில் முடிக்கப்பட்டு, அரசுக்குரிய TAB-ல் படம் பிடிக்கப்பட்டும் அரசுக்கான கட்டண தொகைகளும் பெறப்பட்ட பின், RTO அலுவலக வளாகத்தை விட்டு ஆய்வாளர் மீனாட்சியால் வெளியில் அனுப்பிவைக்கப்பட்டது.*

*இது ஒருபுறம் இருந்தாலும், குறிப்பாக CFRR எதுவும் வழங்கப்படாமல் அனுப்பிய நிலையில், தகுதிச் சான்றுதழுக்காக கொடுக்க வேண்டிய அப்ரூவலும் கொடுக்கப்படவில்லை.*

*அதற்கு காரணம் தகுதிச்சான்றிதழ் வழங்குவதற்காக மீனாட்சியால் கேட்கப்பட்ட லஞ்சம் ரூபாய் 1100-ல், ரூபாய் 400 குறைவாக கொடுக்கப்பட்டதால், அந்த வாகனத்திற்கான FC-க்குரிய அப்ரூவல், ஆய்வாளர் மீனாட்சியால் கொடுக்கப்படவில்லை. இதற்கு ஆதாரமாக அலுவலக CCTV காட்சிகள் மற்றும் அலுவலக கணினியிலும், அரசு TAB-லும் ஏற்றப்பட்ட ஆவணங்களே சாட்சியாக எழுந்து நிற்கும் நிலையில் மீனாட்சியால் லஞ்சம் கோரப்பட்ட, அந்த வாகன நிர்வாகியான இராமலிங்கத்தின் ஆடியோ பதிவையும் நம்மால் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கும் புகாராகவும் அனுப்பிவைக்கப்பட்டது.*

*அதே போல் 16-08-2022-ல் கொடுக்கப்பட வேண்டிய தகுதிச்சான்றுதழ்க்கு கூடுதலாக ருபாய் 400 கொடுக்கப்படாததால், மறுநாள் அதாவது, 17-08-2022-ல் மற்றொரு ஆய்வாளரால், மீண்டும் அந்த டாரஸ் வாகனம் மறு ஆய்வு செய்யப்பட்டு, எந்த பிரச்சனையும் இல்லாமல், FC வழங்கப்பட்டதற்கான சான்றிதழ் கொடுக்கப்பட்ட அந்த பதிவுகளும் (பார்க்க - இணைப்பில்) கணினியிலும் ஆதாரமாக உள்ளது .*

இது மட்டுமல்லாது மீனாட்சியால், லஞ்சம் கேட்கப்பட்டதற்கு நம்மால் ஆதாரத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆடியோக்களின் (இணைப்பில்) பதிவுகளையும், நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற பிறகும், மீனாட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய போக்குவரத்து நிர்வாகம், மீனாட்சியை காப்பாற்றுவதற்கான நிலையில், நமது புகாரை முடக்க நினைக்கிறது.

அது மட்டுமல்லாது இவரது விதிமீறலான பணிகளை ஒரு ஆதாரத்திற்காக நமது நிருபர் போட்டோ எடுத்ததற்காக அதனை மிகைப்படுத்தி, ஒரு புகாரை, கரூர் காவல் நிலையத்தில் பதிவு செய்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், அதே நேரத்தில் இவரை பற்றி (மீனாட்சி) நம்மால் இவரது துறை உயர் அதிகாரிகளுக்கு எந்த புகாரும் நாம் அளிக்ககூடாது என்ற உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்றும், அதே போல் இவரது இந்த புகார் குறித்த செய்திகள் எந்த பத்திரிகைகளிலும் நாம் வெளியிடக்கூடாது என அவரது அதிகாரிகளிடமே மீனாட்சியால் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டு நாம் மிரட்டப்பட்டோம். மேலும், அவரது நிபந்தனைகளை நாம் ஏற்காத போது கரூர் போலிசார் கொண்டு வழக்குகள் பதியபட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை பெயரை சொல்லி மீனாட்சி மிரட்டி வருவதோடு, தற்போது அவர் பெற்ற CSR -யை வைத்து வழக்கு பதிய சொல்லி கரூர் போலிசாரையும் மீனாட்சி மிரட்டி வருவதும் தொடர்கிறது.

நாம் கோருவது இதுதான்.அவரது முறைகேடான பணியை ஆதாரத்துடன் நிரூபிப்பதற்காக, நமது நிரூபரால் எடுக்கப்பட்டதுதான் அவரது புகைப்படம். எனவே மீனாட்சியால் மிகைப்படுத்தி கொடுக்கப்பட்ட காவல் புகாரின் CSR யை ரத்து செய்ய வேண்டும். மேலும், மீனாட்சி மற்றும் அவரது தோழியான செயலாக்க பிரிவு RTO வான பூங்குழலி மற்றும் சில காவலர்களால், கரூர் மாவட்ட போலீஸ் முகநூலில் மேற்கண்ட செய்தி குறித்து நம்மை குறை கூறி பொய்யாக பதிவிட்ட முறையற்ற செய்தியை நீக்குவதோடு, அதனை பதிந்தவர்கள் மீதும், அதற்கு துணை போனவர்கள் மீதும் கிரிமினல் வழக்கும் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகளையும் எடுக்கவும் பணிந்து கோருகிறோம்.

மேலும்,இது குறித்து புகாராக நாம் கடந்த 18-08-2022-ல் தொடங்கி நாளது தேதி வரை ஆய்வாளர் மீனாட்சி மீது சில புகார்களையும், சில பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வந்த செய்திகளையும் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கும், அமைச்சரின் அலுவலக கவனத்திற்கும் கொண்டு சென்று உரிய நடவடிக்கைக்கு கோரி வந்தோம்.

அதேநேரத்தில் உடனடியாக உரிய நடவடிக்கை இல்லை என்ற போதிலும், இடைப்பட்ட இந்த 23 நாளில் தரம் இல்லாத எத்தனை வாகனங்களுக்கு இவர் FC வழங்கியிருப்பார் என்றும், எந்தொரு வாகனத்தையும் இவரால் இயக்கி பார்க்காமலே FC வழங்கப்பட்டுள்ளது குறித்தும் அதனால் எத்தனை உயிர்கள் சாலையில் மரித்திருக்கும் என்றும், மற்றும் அலுவலகத்திற்கே வராத வாகனங்களுக்கும் அதாவது ரன்னிங் FC என்றழைக்கப்படும் முறைகேடான பணிகளை இதுவரை மீனாட்சி எத்தனை செய்திருப்பார்? அதனால் இனி வரும் காலங்களில் எல்லாம் எத்தனை உயிரிழப்புகள் ஏற்பட இந்த மீனாட்சி வழி வகுத்திருப்பார் என்பதை எல்லாம் தொலைநோக்கு பார்வையில் கவனத்தில் எடுத்து அலுவலக CCTV காமிரா காட்சிகளை கைப்பற்றுவதோடு, அவரது அலுவலக நாட்குறிப்பு டைரியினையும் ஆய்வு செய்தால், மீனாட்சி பல... பல... வருடங்களாகவே இவர் எந்தவொரு வாகனங்களையும் இயக்கி பார்க்காமலே FC வழங்கியதும், அதிக Test களை பார்த்தது மற்றும் குறிப்பிட்ட அலுவலக பணிக்குள் முடிக்க முடியாத பணிகளையும் முடித்த மாதிரியான முறைகேடுகளை மீனாட்சி

*செய்திருப்பதும் தெரியவரும். அதனால், எத்தனை விபத்துக்களுக்கு மீனாட்சி காரணமாக இருந்திருப்பார் என்பதையும் அறிய முடியும். மேலும் நமது புகாருக்கு நாளது தேதி வரை மீனாட்சி மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது என்பது போக்குவரத்து துறையின் நிர்வாகத்தின் எவ்வளவு பெரிய ஒரு அலட்சிய பணிகள் என்பதை அரசு உற்று நோக்கி உடனே அதிரடி நடவடிக்கையில் இறங்கவேண்டும் என பணிந்து கோருகிறோம்*

*மேலும், விபத்தை பெருக்க வழிவகுக்கும் இந்த சம்பவத்தில் கூட அதிரடி நடவடிக்கைகள் இல்லாதபட்சத்தில், இந்த துறை அதிகாரிகளால் எப்படி விபத்தை கட்டுப்படுத்த போகிறார்கள்? என்பதே பல்வேறு கேள்விகளாக எழுந்து வருகிறது.*

*கடந்த 18-08-2022 -லே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு உரிய ஆதாரத்தோடு, நாம் புகாராக கொண்டு சென்ற பின்பும், சில நொடிகளிலே ஆதாரங்களை பார்வையிடுவதற்கான அனைத்து வழிகள் இருந்தும், அதாவது நம்மால் புகார் கூறப்பட்ட, இருபத்தி மூன்று நாட்களுக்கு பிறகும், இன்றைய 10-09-2022 நாளது தேதி வரை மீனாட்சியின் மீது எந்தவொரு நடவடிக்கையும் போக்குவரத்து துறை அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை நமது புகாரும் விசாரிக்கப்படவில்லை என்பது, மீனாட்சியின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக லஞ்சப் பணம் பேசும் பேரமாய் ஏன் இருக்கக்கூடாது என்று கேள்விகளை எழுப்பினாலும் அது மிகையல்ல தானே?*

*அன்றாட நடக்கும் விபத்துக்களில் சாலையில் கொத்து கொத்தாய் பலிகளாகும் அப்பாவி மக்களின் மனித உயிர்கள் என்ன அவ்வளவு மலிவாகிவிட்டதா?*

*மீனாட்சி போன்ற சில மோட்டார் வாகன அதிகாரிகளின் முறைகேடான பணிகளால்தான் விபத்துக்கள் பெருகுகிறது என நம்மால் குறிப்பிடுவதை போக்குவரத்து துறையின் நிர்வாக அதிகாரியான JTC வெங்கட்ராமனால் இல்லை என்று மறுக்க தான் முடியுமா?*

*தரம் இல்லாத வாகனங்களுக்கு எல்லாம் லஞ்சம் வாங்கிகொண்டு தகுதிச்சான்றுகள் வழங்கி, விபத்தை பெருக்கி வரும் மீனாட்சி போன்றோரை உடனே டிஸ்மிஸ்ஸே செய்யலாம் என்றாலும், அதற்கான நடைமுறைகளுக்குரிய விசாரணைகள் சற்று காலதாமதப்படும் என்பதால்,*

*தற்போதைக்கு இடைக்கால நிவாரணமாக, குறைந்த பட்சமான பணியிடை நீக்கம் செய்தாவது மீனாட்சியை தண்டித்திருக்கலாம்.*

*ஆனாலும் அதை கூட செய்யாத நிர்வாக அதிகாரியான வெங்கட்ராமன் இதன் தவறுகள் குறித்து விபரமாக புதிய ஆணையரிடம் பரிந்துரைக்கப்படாதது இணை ஆணையரின் ஊழல் நிறைந்த நிர்வாக திறமைகளை அல்லவா இது காட்டுகிறது என்பதையும் அரசு உற்று நோக்கி JTC வெங்கட்ராமன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

*அது மட்டுமல்லாது மிக குறைந்தபட்ச தண்டனையான செயலாக்க பிரிவிற்கு கூட மீனாட்சியை பணியிடமாற்றம் செய்து விபத்தை தடுப்பதற்கான முயற்சியை அட்மின் செய்திருக்கலாம்.*

*ஆனால் அதை கூட போக்குவரத்து நிர்வாக அதிகாரியான JTC-வெங்கட்ராமனால் அதிரடியான ஆணையருக்கு எடுத்துரைக்கப்படாத போது, போக்குவரத்து துறையின்*

நிர்வாகம் JTC நிர்வாக கோளாறுகள் எவ்வளவு மோசமாக உள்ளது என்பது குறித்து, மதிப்பிற்குரிய HS-ம்-CS -ம் DVAC-ம், ஆணையரும் தான் மேற்படி அதிகாரியின் மீது அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு விபத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

.

எனவே நிர்வாக JTC-யின் அலட்சியப் பணிகள் குறித்தும், அவரது ஊழல் பணி குறித்தும் கூட, JTC-யையும் சேர்த்தே பணியிடை நீக்கம் செய்வதிலோ அல்லது இவரையும் கூட செயலாக்க பிரிவுக்கு பணியிடமாற்றம் செய்வதிலும் கூட தவறில்லை என்பதுதான் நியாயம் கோருவார்களின் பதிவுகளாக உள்ளது என்பதோடு நமது கோரிகையும் அதுவே ஆகும்.

எனவே, போக்குவரத்து அமைச்சர் இதனை சீர்தூக்கி பார்ப்பதோடு போக்குவரத்து ஆணையரும், விஜிலென்ஸ் இயக்குனரும், உரிய நடவடிக்கை எடுத்து அப்பாவி மக்கள் சாலையில் உயிர் பலியாவதை தடுக்கவும், விபத்தை குறைக்கவும் இது போன்ற அதிகாரிகளை சிறையில் தள்ள அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள பணிந்து கோருகிறோம்.

கைப்புண்ணிற்கு கண்ணாடி தேவை இல்லை என்பதுபோல, நம்மால் அளிக்கப்பட்ட இந்த புகாரின் ஆதாரங்களுக்கு சில நிமிட விசாரணைகளே போதும் என்கிறபோது, இனியாவது, கடந்த 23 நாட்களாக கடத்தும் காலங்களை போல் இல்லாமல், உடனே உரிய தண்டனைகளை மீனாட்சிக்கு வழங்குவதே...

மற்ற ஊழல் அதிகாரிகளுக்கு எல்லாம் எச்சரிக்கையாக அமையும் என்பதை பணிந்து தெரிவிப்பதோடு, உரிய நடவடிக்கைக்கும் கோருகிறோம்.

**நெல்லை கோபால்**
**மூத்த பத்திரிகையாளர்**
**10-09-2022. / 9944478389.**




இவர் தான் குளித்தலை ஆய்வாளர் திருமதி மீனாட்சி, காக்கிசட்டையும், தொப்பியும், சீருடை அணியாத வாகன ஆய்வாளர்



குளித்தலை அலுவலகத்தில் செய்யவேண்டிய பணியை கரூர் அலுவலகத்தில், புரோக்கர்கள் படை சூழ ஆய்வாளர் மீனாட்சி செய்தபோது எடுத்த புகைப்படம்.

அரசு அதிகாரிகளின் பணிகளில் முறைகேடான மற்றும் ஊழல் பணிகளை வெளிகொணர கொண்டு வருவோர்க்கு எதிராக போலிசார் வழக்கு போடக்கூடாது என்பதற்காக, உயர்நீதிமன்றம் உத்திரவிட்டதற்கான பிரபல நாளிதழில் வெளிவந்த பத்திரிகை செய்தி. இப்படியிருக்கையில் வாகன ஆய்வாளர் மீனாட்சி மீது, பதிய வேண்டிய வழக்கை, பத்திரிகையாளர் மீது பதிவதற்கு வாகன ஆய்வாளர் மீனாட்சியால் ஆதராமில்லாமல் கொடுக்கப்படும் புகாரை காவல் அதிகாரிகள் ஏற்பது நியாயம்தானா? சீர்தூக்கி பார்த்திட பணிந்து கோருகிறோம்.




மோட்டார் வாகன அதிகாரியான மீனாட்சி லஞ்ச கேட்ட பதிவுக்கான உரையாடல்கள்



ஊழலை வெளியுலகுக்கு கொண்டு வருவோரை

போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது

ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 27: ஊழலை வெளி உலகுக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டுகளை பத்திரிகையில் வெளியிட்டது தொடர்பான வழக்கை ரத்து செய்யக் கோரிய மனு மீது சென்னை உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவு வருமாறு:

சட்டத்தை நிலைநாட்டும் போலீசார் குடிமக்களை பாதுகாக்க வேண்டும். குறிப்பாக அதிகாரத்தை பயன்படுத்தி ஊழல் செய்வோரை விட அந்த ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோரை பாதுகாக்க வேண்டும். அதற்கு மாறாக ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோர் மீது வழக்கு மேல் வழக்கு போட்டு அவர்களை கொடுமை செய்யக்கூடாது.

ஏராளமான ஆதாரங்களுடன் கொடுக்கப்படும் புகார்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்வது இல்லை. ஆனால், ஊழலை வெளி உலகுக்கு தெரியப்படுத்துபவர்கள் மீதே வழக்குகளை போலீசார் பதிவு செய்கிறார்கள்.

போலீசாரை தங்களது பாதுகாவலர்கள் என்று பொதுமக்கள் நினைக்கின்றனர். அதற்கு மாறாக போலீசார், செயல்படக்கூடாது. வேலியே பயிரை மேய அனுமதித்தால் சமுதாயத்தில் அராஜகம் அதிகரித்து விடும். சட்டத்தின் ஆட்சி நடைபெறாது.

ஊழல் செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் அதை வெளியுலகத்துக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தொந்தரவு செய்யக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க போலீஸ் அதிகாரிகளை உயர் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இணை போக்குவரத்து ஆணையர் (வடக்கு) (மற்றும்) 13 APR 2022 சென்னை-600 102 வட்டாரப் போக்குவரத்து அதிகாரி (அலுவலகம்)

போக்குவரத்து துறை

அனுப்புநர்
திரு. S. நடராஜன் இ.ஆ.ப.,
போக்குவரத்து ஆணையர்.
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

பெறுநர்
1. அனைத்து சரக அலுவலர்கள்.
2. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்.
3. அனைத்து பகுதி அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர்கள்.
4. அனைத்து சோதனைச் சாவடிகள்

11246/RA1/2022 நாள்.13.04.2022

(சுற்றறிக்கை எண்.32/2022)

பொருள்: பொதுப் பணிகள் – போக்குவரத்து துறை அலுவலகங்களுக்குள் இடைத்தரகர்கள், வெளி நபர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி பணியாளர்கள் – அனுமதிப்பதை தடை செய்தல் – உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: போக்குவரத்து துறை, சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்கள். 45/91, 35/99, 100/98, 17/2000, 38/2002, 49/2022, 26/2003, 24/2005, 6/2009, 6/2013, 1/2015, 15/2018, 30/2021, 32/2021 மற்றும் 63/2021.

*******

போக்குவரத்து துறை அலுவலகங்களில் இடைத்தரகர்கள் மற்றும் வெளிநபர்களை அனுமதிக்கா வண்ணம் செயலாற்றுமாறு பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கைகள் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருந்த போதிலும் இச்சுற்றறிக்கைகளை முறையாக பின்பற்றாத காரணத்தினால் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அதிகப்படியான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசிடமிருந்தும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து பின்வரும் அறிவுரைகள் மீண்டும் வழங்கப்படுகிறது.

1. ஒவ்வொரு அலுவலகத்திலும் பொதுமக்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும், அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களுக்கு உரிய விவரங்கள் வழங்க வேண்டியும் **மக்கள் தொடர்பு அலுவலர்** ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் அலுவலகத்தின் முன்புறம் அமர்ந்து அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு பொறுப்பாகவும், கனிவாகவும், பணிவாகவும் பதில் அளித்து அவர்களுடைய பணிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக விரைவில் முடித்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலர்/நேர்முக உதவியாளர்

இருவரில் ஒருவர் கண்டிப்பாக காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 வரை அலுவலக வாயிலில் இருந்து அலுவலகம் வரும் பொது மக்களுக்கு பணிகள் தங்கு தடையற்று நடக்கிறதா என உறுதி செய்ய வேண்டும்.

2. ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல் தொடர்பான பணிகளை துரிதமாக முடிக்க தேவையான அளவிலான (Optimum number of slots) பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
3. அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் பணியாளர் அடையாள அட்டை அணிந்து பணிபுரிய வேண்டும்.
4. வாகனப் பதிவிற்கு வரும் வாகன விற்பனை முகவர்கள் மற்றம் ஓட்டுநர் தேர்விற்கு வரும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமையாளர்கள் / ஓட்டுநர்கள் அடையாள அட்டையுடன் மட்டுமே அலுவலகத்திற்கு வர அனுமதிக்க வேண்டும்.
5. இடைத்தரகர்கள், வெளிநபர்கள் யாரும் அலுவலகத்திற்குள் கண்டிப்பாக நுழைய அனுமதிக்கக் கூடாது.
6. மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பணியின்போது கட்டாயமாக சீருடை அணிந்திருக்க வேண்டும்.

எனவே, அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் மேற்கண்ட அறிவுரைகளை உரிய முறையில் கண்காணித்து பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அனைத்து சரக அலுவலர்களும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களுக்கு அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்து ஆணையர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவுரைகள் பின்பற்றப்படுகின்றனவா என கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இதில் ஏதும் சுணக்கம் ஏற்படுமாயின் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனைத்து சரக அலுவலர்களும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களில் இருந்து பெற்று அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) S.நடராஜன்,
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-05.

//உண்மை நகல்//

13/04

இணைப் போக்குவரத்து ஆணையர்(நி),
சென்னை-05.

13/4/22

**Transport Department**

From

Dr.T. Prabhakara Rao, I.A.S.,
Principal secretary/
Transport Commissioner,
Chepauk,
Chennai-600 005.

To (By E-Mail)

1) All the Zonal Officers in Tamil Nadu,
2) All the Regional Transport Officers in Tamil Nadu,
3) All the Motor Vehicle Inspectors in Unit Officers,
4) All the Motor Vehicle Inspectors in Check post. (Through R.T.O)

**Letter No.33728/H1/2013, Dated: 28.06.2013.**

**(Circular No.18/2013)**

Sir,

Sub: Motor Vehicles - Transport Department - Motor Vehicle Inspectors - Non wearing of full uniform - Certain instructions issued - regarding.

*****

It has come to the notice of this office that the Motor Vehicle Inspectors are not wearing full uniform while on duty in office and also at the time of checking of vehicles on road. Non wearing of uniform creates doubts among the public, whether the vehicle checking is conducted by bonafied officials or not. As a result the public are not able to recognise the checking officials are Motor Vehicle.

**R. No. T1/58405/2003** **Dt . 02.09.2003**

**CIRCULAR NO. 34/2003**

**Sub :** Establishment – Transport Department - Motor Vehicles Inspectors – wearing of full uniform – certain Instructions – issued.

Instances are come to notice that the Motor Vehicles Inspectors are not wearing full Uniform while on duty.

2. The Motor Vehicles Inspectors Grade – I & II should be in full uniforms as prescribed in rule 427 of T.M.M.V. Rules 1989 read with section 213 (3) of the Motor Vehicle Act 1088 while on duty in office and during their checking out of office.

3. The Deputy Transport Commissioner and Regional Transport Officers concerned should see that the Motor Vehicles Inspectors are in full uniform while doing their official duties.

The above instructions should be followed scrupulously and any violation in this regard will be viewed seriously.

**Sd/-. K.Ramalingam**
Transport Commissioner,
Chennai – 5.

போக்குவரத்து துறையின் மோட்டார் வாகன அதிகாரிகளின் பணிக்கான அரசு உத்தரவிட்டிருக்கும் விதிமுறைகள்.